ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

காமாதிகளால் கலங்கி சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும் அந்தக்கரணத்தில் உண்மை உணர்வே உண்டாகமாட்டாது. காமவெறி பிடித்தவனுக்குக் கண்ணேதெரியாதெனச் சொல்வதுமுண்டு. கோபாவேசங்கொண்டவன் கீழ்-மேல் பெரியோர் சிறியோர் என்பதாகக் கெவனிக்கமாட்டான். அப்படியிருக்கையில் அவ்விதம் கலங்கிய மனதில் ஆத்துமதத்துவஞானமெப்படியுண்டாகும். அதனுற்ருன் ஆத்தும தத்துவஞானத்தை விரும்புகிறவனுக்கு சமதமாதி ஸாதனங்களை சாஸ்திரம் விதிக்கின்றது. பூர்வ புண்ணிய வசத்தால் அந்தக்கரணசுத்தியும், ஆத்துமாஞத்துமவிவேகமும், பரவைராக்யமும், சமாதிகளும் நிறையப்பெற்றவன் தீவிரமான மோக்ஷவிருப்பத்தையடைந்து, சற்குருவின் பாதம் பணிந்து விசாரம்செய்தால் பல்லாயிரம் பேர்களுள் யாரேனுமொருவருக்கு அத்தகைய ஆத்தும தத்துவக்ஞானம் உண்டாகுமோ! என்னவோ! என்று சாஸ்திரம் சந்தேகப்படுகின்றது. அது உசிதமே. ஸாமான்னியமாய் லௌகிகமான கீர்த்திப்ரதிஷ்டைகளை ப் பெரிதாக நினைத்தவர்களுக்கு மோக்ஷவிருப்பமேது? தத்துவவிசாரமெங்கே? அந்த அற்பப் பயனுக்காகக் கண்டபேர்களையெல்லாங்கண்டு கண்டபடியெல்லாம்சொல்லி நல்ல பெயரையும் பட்டத்தையும்பெற்றுப் பிரதிஷ்டையையடையப் பாடுபடுவார்களேயன்றி மோக்ஷவழிக்கெங்கே திரும்பப்போகிறுர்கள். ஆகவே தத்துவ ஞானத்திற்கதிகாரியாகவாவது மிகவரிதே மோக்ஷவழியில் திரும்பாதவர்கள் மோக்ஷத்திலாசைகொள்ளாமலில்லை, சுகத்தில் ஆசைப்படுவதால் மோக்ஷத்தில் ஆசைகொள்வதாகவே ஆகிறது. நிரதிசயசுகமே மோக்ஷமல்லவா? ஆனுலந்த உண்மை அவர்களுக்குத் தெரியவில்லை. சுகத்திலாசைகொண்டு ஸம்ஸாரவழியிற் செல்லுகிறுர்கள், அங்கு துக்கத்தையே அனுபவித்துப்பச்சாத்தாபப்படுகிறுர்கள், பிந்தித்தாபப்படுவதாலென்னபயன்? துக்கமேவேண்டாமென்ற எண்ணமிருந்தால் ஸம்ஸாரத்தைவிட்டல்லவா ஓடவேண்டும். சில மந்தபுத்திகள் ஸம்ஸாரத்திற்குள்ளிருந்தே சுகப்படுவதாக ஸ்வப்பனம் காண்கிறுர்கள். அதில் துக்கத்தை விலக்கிவிட்டதாகவும் காண்கிறுர்கன். இது மண்ணைவைத்துக்கொண்டு சாதம், கறி, கொழம்பு என விளையாடும் குழந்தைகள் கல்லைப்பொருக்கிச் சோற்றை உண்பதாகச்சொல்லிக்கொள்ளும் கதையை ஒத்ததாயிருக்கிறது. ஸம்ஸாரத்தில் துக்கவிலக்கமுண்டா? சுகப்ராப்தியுண்டா? இதன் உண்மையை அறியாமல் அறிவாளரெனப் பெயர்பெற்ற பட்டதாரிகளும் பாமரர்போல் வீணன பாடுபட்டுக் கஷ்டப்படுகிறுர்கள். விவேகிகள் அவர் வழிசெல்லாமல் காமாதிகளுக்கு வசப்படாமல் சமாதிகளையடைந்து பொறுமையுடன்புனிதவழியில்பிரவேசித்துப் புருஷார்த்தத்தைப் பெறுவார்களாக. சுபம். பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ ஆடி௴ ௧௨

## ஸம்ஸாரத்தில் சுகலேசமில்லை.

ஸம்ஸாரிகள் ஸம்ஸாரத்தை யனுபவிக்கிறார்கள். ஆயினும் அது துக்கஸ்வரூபமாயது எனத்தெரிந்துகொள்ளவில்லை. ஸம்ஸாரத்தில் விஷய சம்பத்தால் சுகம் போற்றோன்றுவதும் சுகாபாஸமே யன்றி கிஞ்சிற்றேனுமதில் சுகமில்லை. இந்த உண்மை ஆவட்யரென்பவருக்கும் ஜைகீஷவ்வியருக்கும் நடந்த சம்பாஷணையிலிருந்து தெரியவருகின்றது. பகவானாகிய ஜைகீஷவ்ய மஹரிஷிக்கு ஸம்ஸ்காரத்தின் ஸாக்ஷாத்காரத்தினால் பத்து மஹாகல்ப்பங்களில் தனக்கு நேர்ந்த ஜன்மாந்தர பரிணாமக்கிரமம் ப்ரத்தியக்ஷமாயனுபவிக்கப்பட்டபடியால் விவேகத்தாலேற்பட்ட ஞானமுண்டாயிற்று. ஒருஸமயம் பகவான் ஆவட்டியரென்பவர் இஷ்டப்பட்டதோர் சரீரத்தை யெடுத்துக்கொண்டு அந்த ஜைகீஷவ்யரைப் பார்த்துக்கேட்டார். ஓ! பகவானே! பத்து மஹால்பங்களாக ஸத்துவகுணமேலீட்டால் ரஜோகுண தமோகுண மலமற்ற சுத்தமான புத்தியையுடைய தாங்கள் நரகங்களிலும், திர்யக்யோநிகளிலும் ஸம்பவிக்கும் துக்கத்தையும், தேவமனுஷ்யாதி யோநிகளில் விஷயசுகத்தையும் அடிக்கடி அனுபவித்து ஸித்தி விசேஷத்தால் அந்தந்தப் பிறப்புகளிலும் ஞாபகசக்தி குறையாமலிருந்தீர்களே! அவைகளில் தாங்களனுபவித்த சுகதுக்கங்களுள் எது அதிகம். பத்து மஹா கல்பங்களாகத் தொடர்ந்து வந்த ஜன்மங்களின் நினைவு தங்களுக்கு இருக்கின்றபடியால் தாங்கள்தான் இதைச் சொல்லக்கூடும்—என்று கேட்கும்பொழுது ஆவட்டியரை நோக்கி ஜைகீஷவ்யர் கூறுகின்றார். ஓ! ஸ்வாமீ!! பத்து மஹா கல்ப்பங்களாக புத்தி சக்தி குறையாமல் தாழ்ந்த பிறப்புகளிலும், உயர்ந்த பிறப்புகளிலும் சுகதுக்கங்களை யனுபவித்து வந்ததையெல்லாம் நினைத்துப்பார்க்கையில் நான்

அனுபவித்ததெல்லாம் துக்கமாகவே தோன்றுகிறதேயன்றி சுக லேசமுமில்லையென்றார். அப்பொழுது பகவான் ஆவட்டியர் தாழ்ந்ததிர்யக் யோநிகளில் அனுபவித்தது துக்கமாயிருக்கலாம். அணிமாதி அஷ்டமஹா ஸித்திகளாலேற்பட்ட சிறந்தஸந்தோஷ சுகமும் துக்க ஜாப்தாவிலேயே சேற்கப்பட்டு விட்டதோ"-என்று கேட்டதற்கு பகவான் ஜைகீஷவ்யர் — "அணிமாதி ஸித்தியா லேற்பட்ட ஸந்தோஷ சுகமும் விஷய சுகத்தையபேக்ஷித்துசிறந்த ஸுகமாகக்கூறப்படுமேயன்றி கைவல்யசுகத்தையபேக்ஷித்து அந்தசுகமும்-சுகாபாஸம்-துக்கமேயன்றி வேறில்லை. ஏனெனில் அணிமாதி ஐசுவர்யத்தால் எந்தெந்த சரீரேந்திரியாதிகள் பிரியமாகத் தோன்றுகின்றனவோ. அந்தந்த சரீரேந்திரியாதிகள் கிடைக்கும். ஒரே ஸமயத்தில் ஆயிரக்கணக்கான சரீராதிகள் வேண்டுமானாலும் கிடைக்கும். திவ்ய விமானங்களும் கிடைக்கும். வேண்டிய போகபோக்கியங்களெல்லாம்கிடைக்கும். அவைகளோடு பூமி — அந்தரிக்ஷம் — ஸ்வர்க்கம் முதலிய லோகங்களில் இஷ்டப்படி சஞ்சரித்து சந்தோஷப்படலாம். இவ்வளவிலும் சரீரேந்திரியாதிகளிருக்கின்ற படியால் அவைகளிருக்கின்றவரை துக்கம்விலகுவதில்லை. அதுவேணும், இதுவேணுமென்ற ஸங்கல்பமும், அதனால் காமமுமேற்படுகின்றது. காமமென்பது துக்கவடிவமே. ஆகையால் ஸம்ஸாரத்தில் எங்கு சென்றாலும் துக்கமேயன்றி சுகலேசமில்லை. கைவல்ய சுகமே சுகம். புண்ணியவசத்தால் புனிதமான பிறவியைப் பெற்றவன் அந்த சுகம் கிடைக்கவழிதேட வேண்டுமேயன்றி வீணாய் ஸம்ஸாரத்தில் கஷ்டப் படக்கூடாது" — என்றார். இந்த சம்பாஷணையிலிருந்து அனேக கற்பகோடிகாலம் ஜீவித்து ஞாபக சக்தியோடு அனுபவித்த மஹான்கள் சொல்லுவது சரியாயிருக்குமென்றும், நேற்று நடந்தது இன்று நினைவுக்கு வாரமலிருக்கும் அற்பக்ஞன் சொல்லுவது சரியாயிருக்காதென்றுந் தெரிகிறது. அதனால் யாவரும் பெரியோர்கள் வழியைப் பின்பற்றிப் பேராந்தம் பெறுவாராக

சுபம்

பத்திராதிபர்.

# அத்வைதமதமே வைதிகம்

(537 பக்கத்தொடர்ச்சி)

இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் என்பதின் ஸ்வரூபம் யாதெனில் கூறுவாம். கிருஹம் ஆராமம் (தோட்டம்) க்ஷேத்திரம் (வயல்) வித்தம் (பணம்) புத்திரன் மித்திரம் களத்திரம் முதலியதும் வைஷயிக ஸுகமாகிய காமத்துக்கு ஸாதனமாயுமுள்ள போக்யங்களாகிய விஷயங்களே அர்த்தமென்னும் புருஷார்த்தம் பணம் ஒன்றுதான் அர்த்தமென்பதில்லை. கீழ்க் கூறிய யாவுமே அர்த்தந்தான். வைஷயிக ஸுகத்திற்கு ஸாதனமான எந்தெந்த வஸ்து எவரெவர்களுக்கு அபீஷ்டமாகின்றதோ அதெல்லாமே அவாவர்களுக்கு அர்த்தந்தான். இக்கருத்தே

न खलुधनत्वंजातिर्यस्य यदिष्टं तदेवतस्यधनम् ।
तत्तदिवपामराणामाकिञ्चन्यंधनंविदुषाम् ॥

''தனம் தனமென்று சொன்னால் அதனால் தனத்தன்மை என்னும் மற்றொன்றிலில்லாத பணத்தில் மாத்திரமுள்ள ஓர் ஜாதி கூறப்படுகிறதில்லை. பின்னேயோவெனில் எவனுக்கு எது இஷ்ட வஸ்துவோ அதுவே அவனுக்குதனம், பாமரர்களுக்கு கிருஹம் ஆராமம் முதலிய அந்தந்த வஸ்து தனமாவதுபோல் வித்துவான்களுக்கு ஆகிஞ்சன்யமே அதாவது ஒன்றுமில்லாதிருத்தலாகிய ஏழைத்தனமே தனம்'' என்று மஹாகவி ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் அவர்களால் கூறப்பட்டிருக்கிறது. அதனாலேதான் தபோதனர்கள் மானதனர்கள் வித்தியாதனர்கள் சமதனர்கள் என்பதால் தபஸ் மானம் வித்யை சமம் (அடக்கம்) முதலியதையும் தனமென்று லோகத்தில் வியவஹரிக்கின்றார்கள், ஆகையால் தனமென்று சொல்லப்படும் அர்த்தமென்பது கிருஹாராமாதிகளான விஷயங்கள் என்று முடிவாயிற்று. அர்த்தமென்னும் சொல்லுக்கு **अर्थ्यतइत्यर्थः** என்னும் வியுத்பத்தியினால் ஆசைப்படக்கூடியது என்று பொருள். தர்மம் முதலியதும் ஆசைப்படக்கூடியதாயிருந்தாலும் விசேஷமாய்ஸமஸ்தஜனங்களும் கிருஹாராமாதிகளான விஷயங்களையே பெரும்பாலும் விரும்புகிறார்கள். அதற்காகப் பலவிதமான முயற்சிகளைச்செய்துகொண்டு சிரமப்படுகின்றார்

கள் என்பது உலகானுபவமாதலால் கிருஹாராமாதி விஷயங் களுக்கே அர்த்தமென்றும் பெயர் வாய்ந்ததென்று கண்டு கொள்க. இவ்விதமான அர்த்தமானது ஸ்வயமே ஸுகமன்று. அதனுல் ஏற்படும் சிற்றின்பமாகிய காமமே ஸுகம். அர்த்தம் சுகஸாதனம், அதனுல் தர்மம் அர்த்தம் இரண்டும் ஸுகரூபமா யில்லாமல் ஸுகஸாதனமானதால் முதலில் கூறப்பட்டது என்று முன் நாம் கூறியது பொருத்தமுடையதே.

இனி மூன்றுவது புருஷார்த்தமாகிய காமம் என்பதின் ஸ்வ ரூபம் யாதெனில் கூறுவாம். இரண்டாவது புருஷார்த்தமாகக் கருதப்பட்ட கிருஹாராம க்ஷேத்திர புத்ர மித்ரகளத்ர பிருத்யா திகளான ஐஹிகமாயுள்ள விஷயங்களாலும் ஸ்வர்காதி லோகங்க ளில் அனுபவிக்கப்படும் நினைத்தவஸ்துவைக் கொடுக்கும் கல்பக விருக்ஷம் காமதேனு சிந்தாமணி நந்தநவனம் ரம்பை, ஊர்வசி மேனகை, திலோத்தமை முதலிய அப்ஸரஸ் ஸ்திரீகள் அமிருதம் முதலியதும், ஸத்யலோகம் வைகுண்ட கைலாஸாதி லோகங்கள் முதலியதுகளில் ஸங்கல்ப்ப மாத்திரத்தால் கிடைத்து அனுப விக்கக்கூடிய ஸாங்கல்பிகதிவ்ய ஸ்திரீகள் அமிருதஸாஸ் முதலிய திவ்யவிஷயங்களுமான ஆமுஷ்மிகமாயுள்ள விஷயங்களாலும் பிரும்மாதிஸ்தம்ப பர்யந்தமாயுள்ள ஜன்மாக்களில் அவரவர்களின் கர்மானுகுணமாகக் கர்மபலனுக ஏற்படுவதும் பலவிதமான தார தம்யமுடையதும் அதனுல் ஸாதிசயமானதும் உண்டாவதால் நச்வரமானதும் மோக்ஷமாகிய பிரும்மானந்த ஸமுத்திரத்தின் திவிலைபோன்றதும் அதனுல் சிற்றின்பமெனப் பெயர்வாய்ந்தது மான வைஷயிக ஸுகமே காமமென்னும் மூன்றுவதாகிய புரு ஷார்த்தம். இது தர்மம் அர்த்தம் இவைகளைப்போல் ஸுக ஸாதனமாயிருமல் ஸ்வயமே ஸுகரூபமாயுள்ளது.

இனி நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷம் என்பதின் ஸ்வரூபம் யாதெனில் கூறுவாம், மோக்ஷமென்பது காமமென் னும் புருஷார்த்தத்தைப்போல் விஷயங்களாலுண்டாகாத தும் கர்மத்தின் பயனுகாததும், அதனுல் நச்வரமாகாததும் பலவிதமான தாரதம்யமில்லாததும் நிரதிசயமானதும் மானுஷா னந்தம் முதல் ஹிரண்யகர்பருடைய ஆனந்தம் வரையிலுள்ள ஆனந்தவிசேஷங்களை

एकद्वाः क्षितिपतिषु द्वित्रा देवेषु पञ्चषा द्रुहिणे ।
एतावन्तो जगति ब्रह्मानन्दार्णवस्य कणाः ॥

"தர்மபுத்திரர் முதலிய சக்கிரவர்த்திகளான மஹாராஜாக்களிடத்தில் ஒன்றிரண்டும் இந்திரன் முதலிய தேவர்களிடத்தில் இரண்டு மூன்றும் ஹிரண்யகர்ப்பனிடத்தில் ஐந்து ஆறும் இவ்வளவுதான் ஜகத்தில் பிரும்மானந்த ஸமுத்திரத்தின் திவிலைகள் இருக்கின்றன" என்று நீலகண்ட தீக்ஷிதர்கள் கூறியபடி தனது திவிலைகளாய்க்கொண்டு பிரும்மானந்த ஸமுத்திரமாய் விளங்குவதும் அதனால் பேரின்பமெனப் பெயர்வாய்ந்ததும் ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதி தைவிகம் என்னும் தாபத்ரயங்களால் உண்டாகும் துக்கமாகிய பிரதிபந்தகம் ஆத்யந்திகமாய் நாசத்தை அடைந்ததால் பிரியமாகவே விளங்குவதும் தன்னுடைய ஸ்வரூப பூதமாயும் அதனாலேயே நித்யமானதுமான உயர்ந்த ஸுகமே இவ்விதமோக்ஷத்தின் ஸ்வரூபம். மதாந்தரங்களில் கூறப்படும் மோக்ஷ ஸ்வரூப நிராகரணபூர்வமாய் பிறகு அத்வைத மதத்தை நிரூபிக்குமிடத்தில் விஸ்தாரமாய்க் கூறப்படும். ஆதலால் மோக்ஷமும் காமம்போல் ஸுக ஸாதனமாகாது ஸுக ரூபமாயுள்ளது. ஆகையால் ஸாதனம்முந்தி ஸாத்யம்பிந்தி என்னும் நியாயத்தால் காமம்மோக்ஷம் இரண்டும் ஸாத்யமாகி ஸுகரூபமாயிருப்பதால் ஸுகஸாதனரூபமாயுள்ள தர்மார்த்தங்களை முதலில் கூறிவிட்டுப் பிறகு கூறப்பட்டது. இனி ஸுகரூபமாகிய காமம் மோக்ஷம் இரண்டினுள் மோக்ஷம் காமம் என்னும் ஸுகஸாதனரூபமாகிய தர்மம் அர்த்தம் இரண்டினுள் அர்த்தம் தர்மம் என்றும் கிரமம் எற்படாததின் காரணம் என்னவென்றால் கூறுவாம்.

(தொடரும்) போலகம், ஸ்ரீராமாசாஸ்திரிகள்.

---

## விச்வகீதார்த்தோபஸம்ஹாரம்.

## ஸ்ரீ பகவத்கீதையின் 18-வது அத்யாய ஸங்கிரஹம்.

(550-வது பக்கத்தொடர்ச்சி)

இங்கு ஒரு ஆக்ஷேபம் பண்ணுவதுண்டு—

'ஸர்வகர்ம பரித்யாகம் என்ற வாக்கியத்தால் எல்லா கர்மாக்களின் பிரயோஜனத்தையும் விரும்பாமலிருப்பது தியாகமென்று

பகவான் சொல்லியிருப்பது யுக்தமில்லை. ஏனெனின் கர்மாக்கள் நித்யம் நைமித்திகம், காம்யம் என்று மூன்றுவிதமாக சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறதால் இவைகளில் காம்யங்களைத் தவிர நித்ய நைமித்திகங்களுக்கு பிரயோஜனம் என்பது கிடையாது. இதனால்தான் இவையிரண்டும் நித்யமென்றும் நைமித்திகமென்றும் வழங்கப்படுகிறது. ஆகவே 'காம்ய கர்மபலத்தியாகம்' என்றுதான் பகவான் உபதேசிக்கவேண்டுமே யொழிய 'ஸர்வகர்மபலத்யாகம்'என்று எப்படி உபதேசம் செய்ய முடியும் ?

ஆகவே நித்ய நைமித்தங்களுக்கு பிரயோஜனமுண்டென்று சாஸ்திரங்களில் சொல்லியிருந்தாலல்லவா அப்பிரயோஜனங்களைக் கருதலாகாதென்று பகவான் உபதேசிக்கலாம் அப்படியில்லையே. ஆதலால் விசக்ஷணபக்ஷம், ஒழுங்கானதல்ல என்று.

இது ஸரியில்லை ஏனென்றால்,

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलं ।

என்ற சுலோகத்தால் நித்தியம்நைமித்திகம்காம்யமென்ற மூன்று கர்மாக்களுக்குமே பிரயோஜனமுண்டென்றல்லவா உபதேசிக்கிறார். நித்ய நைமித்திகங்களுக்குப் பிரயோஜனமில்லையென்று சொல்வதானால்

भवत्यत्यागिनां प्रेत्य न तु सन्यासिनां क्वचित् ।

என்று பயனைவிரும்பாமல் கர்மங்களையனுஷ்டிக்கிறகௌணஸன்யாசிகளுக்கு ஜன்மாந்தரம், ஆயுஸ், போகம் முதலிய கர்மானுபவம் அவசியம் ஸம்பவித்தே தீரும் என்றும் முக்கியஸன்யாசிகளுக்கு கர்மாவெல்லாம் அழிந்துவிட்டதால் கர்மபல ஸம்பந்தமில்லையென்றும் பகவான் எப்படி உபதேசிக்கக் கூடும். ஆகையால் நித்ய நைமித்திகங்களுக்குப் பிரயோஜனமில்லையென்று சொல்வது சரி இல்லை என்று சித்தமாவதால் 'ஸர்வகர்மபலத்யாகம்' என்ற பகவானுடைய வசனம் மிகவும் உசிதமேயாகும்.

இந்த சுலோகத்தின் தாத்பர்யமாவது.—

கர்மாக்களை ஜீவராசிகள் க்ஷணநேரங்கூட விடமுடியாது. ஏதாவதொரு வேலையைப் பிராணிகளெல்லாம் செய்துகொண்டேதான் இருக்கமுடியும். உதாசீனமாயிருப்பதுங் கூட நிவிருத்தி

வடிவக்ரியையேயாகும். ஆகவே கர்மாக்களை எல்லாம் பிரயோஜனத்துடன் விடவேண்டுமென்ற பக்ஷம் சரியில்லை. ஆனால் பிரயோஜனத்தை மட்டும் அபேக்ஷிக்காமல் கடமையென கர்மாக்களை செய்துகொண்டுதான் வரவேண்டும். இது ஸன்யாசத்திற்கு ஸமானமாகும். இதுதான் கௌணஸன்யாஸம் என்பது என்று.

இங்கு சிலர் சொல்வதாவது— முமுக்ஷுக்கள் பிரயோஜனத்தைக் கருதாமல் கர்மாக்களைச் செய்யவேண்டும் என்பது சரியில்லை. அப்படி பிரயோஜனமில்லாத காரியத்தில் முமுக்ஷுக்களுக்குப் பிரவிருத்தி ஸம்பவிக்க முடியாதல்லவா. ஆகவே முமுக்ஷுக்களுக்கும் அவசியமில்லை என்று. இப்படி ஆக்ஷேபிப்பது ஸரியில்லை.

“ धर्मेण पापमपनुदति ”
तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदषन्ति ।
कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतं समाः ॥

என்பதாதி சுருதிகளால் சித்த சுத்தியின் பொருட்டு கர்மாக்களை அவசியம் செய்துகொண்டுதான் வரவேண்டும் என்று விதித்திருப்பதால் ஆத்மதத்வக்ஞானம் உதிக்கும் வரையிலும் பிரயோஜனம் இல்லைஎன்றோ? மௌட்யத்தாலோ, சரீரக்லேசம்ஏற்படுமென்றபயத்தாலோ, கர்மாக்களை ஒருபோதும் விடலாகாது. விடவும் முடியாது. பயனைக்கருதி கன்மாக்களைச் செய்தால் இஹபரசுகந்தான் கிடைக்குமேயன்றி மோக்ஷமென்பது ஸித்திக்காது. பிரயோஜனத்தைக் கருதாமல் அதே கர்மாக்களைச் செய்துவரும்பக்ஷத்தில் சித்த சுத்தி மூலமாக மோக்ஷத்தை அளித்துவிடும். இவ் விஷயத்தைத்தான்

यद्वा विविदिषार्थत्वं सर्वेषामपिकर्मणाम् ।
तमेतमितिवाक्येन संयोगस्य पृथक्त्वतः ॥

என்று ஸ்ரீ ஸுரேசுவராசாரியாளும்

प्रत्यग्प्रवणतां बुद्धेः कर्माण्युत्पाद्य शुद्धितः ।
कृतार्थान्यस्तमायान्ति प्रावृडन्तेघना इव ॥

என்று நைஷ்கர்ம்யஸித்திக்காராளும் அறிவித்திருக்கிறார்கள்.

அப்படியே பரமஹம்ஸாச்ரமத்தை விதிக்கும் வேதங்களாலும், கர்மாக்களை சித்தசுத்திக்குத்தான் செய்யவேண்டுமென்பது அறியப்படும்.

ஸ்ரீ பாகவதத்திலும்,

तावत्कर्माणि कुर्वीत न निर्विद्येतयावता ।

मत्कथाश्रवणादौवा श्रद्धायावन्नजायते ॥

என்று கர்மாக்களைவிடுவதற்கு விஷய வைராக்யத்தையும் பகவானுடைய சரித்திரத்திலாசையையும் அவதியாகக்கூறப்பட்டுளது. ஆகையால் கர்மாக்களின் பிரயோஜனத்தைக் கருதலாகாதென்பதற்கு ஸ்வர்க்கம் பசு புத்திரன் முதலிய பிரயோஜனத்தையும் சரி சித்தசுத்திரூபப்ரயோஜனத்தையும் சரி, பரமேசுவர திருப்திரூப பிரயோஜனத்தையும் ஸரி, ஒன்றையும் கருதலாகாது என்றுதான் அபிப்பிராயம். இவ்விஷயத்தை ஸ்ரீ பகவத்பாதாள்.

यद्यपि फलं न श्रूयतेनित्यस्यकर्मणः । तथापि नित्यं कर्मकृतमात्मसंस्कारम् । प्रत्यवायपरिहारं वा फलं करोत्यात्मन इति । कल्पयत्येवाज्ञः । तत्रतामपि कल्पनांवारयतीति ॥

என்ற வசனங்களால் சித்தசுத்திவடிவபிரயோஜனத்தையும் விரும்பலாகாது என்று நிரூபித்து இருக்கிறார்கள்.

தவிர இங்கு ஒன்று கவனிக்கவேண்டும்.

இந்தப்ரகரணத்தை ஸ்ரீ ராமானுஜர் முதலிய மஹான்கள் முமுக்ஷுக்கள் விஷயமாய் அபிப்பிராயப்பட்டுக்கொண்டு ஒவ்வொரு சுலோகத்தின் முடிவிலும்

मुमुक्षणा कर्मकर्तव्यमित्यर्थः ।

என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிச் சொல்வது சரியில்லை என்று தோன்றுகிறது.

அர்ஜுனன் கௌணஸன்யாசத்தைத்தான் ப்ரச்னம்செய்தானே யன்றி முக்யஸன்யாஸத்தையல்ல. அத்வைதிகளின் அபிப்பிராயப்படி முக்யஸன்யாஸமென்பதே ஒன்றுகிடையாது என்று விசிஷ்டாத்வைதிகள் சொல்ல முடியாது. முக்யஸன்யாஸமுண்டென்பது சுருதிஸ்மிருதி கீதாப்ரசித்தமென்று முன்பே காட்டியுள்ளோம். ஆகவே கௌண ஸன்யாஸ ஸ்வரூபத்தைப் பற்றி

பேசுமிடத்தில் முமுக்ஷுக்களை எப்படி அத்யாஹாரம் செய்வது தகுதியாகும். "முமுக்ஷை" (மோக்ஷத்தில் ஆசை) உண்டாவதற்கு முந்தி மோக்ஷத்திலாசையை உண்டுபண்ணுவதற்காக அல்லவா கௌணஸன்யாஸமென்பது விதிக்கப்பட்டுளது. மோக்ஷத்தில் அதிகவிருப்ப மேற்பட்டவுடனும் ஆத்மவிசாரம் செய்வதற்காகவும் கர்மாக்களை விட்டுவிடுவதும்சாஸ்திரீயந்தான்.

இப்படி மோக்ஷத்தில் ஆசை ஏற்பட்ட பிறகு கர்மாக்களை விடுவது விவிதிஷாஸன்யாஸம் எனப்படும். இதுவும் சுருதி ஸித்தமேயாதலின் முமுக்ஷுக்கு கர்மானுஷ்டானம் அவச்யம் என்பதில்லை. ஆதலால் இப்ரச்னத்தை முமுக்ஷுப்ரகாணமாகக் கருதுவது நியாயமில்லை, கர்மாக்களை பயனைக்கருதாமல் செய்து வந்தால் சித்தசுத்தி ஏற்படும் என்ற அர்த்தத்தையல்லவா இப்பிர காணுபிப் பிராயமாகக் கூறவேண்டும். இவ்வர்த்தத்தைத்தான்

यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषणां ।

என்றுபகவானும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறார். ஆதலால் காம்ய கர்மாக்களை ஒருவருமொருபோதும் யோகஞ்செய்ய லாகாதென்று ஸித்தம்.

இங்கு சிலர் கூறுவதாவது—

காம்ய கர்மாக்களையும் நித்ய நைமித்திகங்களைப் போலப் பிரயோஜனத்தைக் கருதாமல் செய்யத்தான்வேண்டும். காம்ய கர்மாக்களைச் செய்யலாகாதென்பது ஸரியில்லை. அப்படி ஸ்ரீ பகவானுடைய அபிப்பிராயமுமில்லை.

एतान्यपितु कर्माणि ।

என்று பகவானும் காம்யகர்மாக்களை விடலாகாதென்று தானுபதேசிக்கிறார். ஆதலால் நித்யகர்மாக்களை மட்டும் செய்துவரவேண்டுமென்பது உசிதமில்லை என்று.

இச்சங்கை சரியல்ல.

காம்ய கர்மாக்களைப் பிரயோஜனத்தை யபேக்ஷிக்காமல் செய்துவந்தால் அவையேதான் நித்ய கர்மாவென்பதே யொழிய நித்யகர்மாவென்பது வேறென்று இல்லை. காம்ய கர்மாவுக்கும் நித்திய நைமித்திகங்களுக்கும் ஸ்வரூபத்தில் பேதமென்பதில்லை. பிரயோஜனத்திலாசையுடன் செய்யப்படும் கர்மா காம்யமென்றும்

பிரயோஜனத்தில் விருப்பமில்லாமல் செய்யப்படும் கர்மா நித்ய மென்றுஞ் சொல்வதேயன்றி வேறல்ல, ஆகவே நித்யமும் காம்யமாகலாம். காம்யமும் நித்யமாக மாறிவிடலாம். புருஷர் களுடைய அபிப்பிராயத்தில் நித்யகாம்ய பேதமேயன்றி கர்மஸ் வரூபத்திலல்ல. ஸ்ரீ பகவத்பாதாள் ஓரிடத்தில் காம்யகர்மாவிற் கும், மத்தியிலும் நித்யத்வமுண்டென்று சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் நித்ய காம்யபேதத்தை தந்திரவார்த்திக கார்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நித்யகர்மாக்களுக்கும் காம்யங்களுக்கும் ஸ்வரூபத்திலேயே பேதமிருப்பதாகக் கூறுவது ஸரியல்ல.

அன்றியும், ஏதான்ய பிது என்ற சுலோகத்தால் பகவான் காம்ய கர்மாக்களைச் செய்துவரும்படி உபதேசஞ் செய்திருப்ப தாக இவர்கள் சொல்லியிருப்பதும் ஸரியில்லை. இந்த சுலோகமும் காம்யகர்மாவைப்பற்றியதாகச் சொல்ல முடியவில்லை. காம்ய கர் மாக்களை சாஸ்திரங்களில் அனுஷ்டிக்கலாகாது என்று நிஷே திக்கவில்லையா ?

நித்யகர்மாக்களையும் விடுவதற்காக முயற்சிக்கும் முமுக்ஷு களுக்கு காம்யகர்மானுஷ்டானம் எப்படி ஸம்பவிக்கும். முந்தின அத்தியாயங்களிலும் சுருதிஸ்மிருதிகளிலும் காம்யகர்மானுஷ் டானம் நிந்திக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் காம்யகர்மாவைப் பற்றி இவ்விடம் சொல்லியிருப்பதாக நினைப்பதற்குக் கொஞ்ச மும் இடமுல்லை.

இதனால் ஸாங்கிய மீமாம்ஸகர்களின் அபிப்பிராயமும் யுக்த மில்லை என்று கண்டிக்கப்பட்டதாக ஏற்பட்டு விட்டது.

வேதசாஸ்திரங்களால்விதிக்கப்படும்கர்மாக்களில்தோஷம்என் பதுஎப்படிஏற்படும். யாகத்தில்ஏற்படும் ஜீவஹிம்ஸை ஹிம்ஸையே யல்ல. ஹிம்ஸையெல்லாம் நிஷித்தமென்று வைதிகமத ஸித்தாந்தமில்லை, சிலவிடத்தில் நிஷித்தம் சிலவிடத்தில் விஹிதம் என்றிருவிதமாகத்தான் ஸித்தாந்தம். இதன்விரிவு வேறிடம் காண்க. ஆதலால் ஸாங்கிய பக்ஷமஸங்கதம். அப்படியே மீமாம் ஸகபக்ஷமும் ஸரியில்லை. எக்காலத்திலும் கர்மாக்களை விடலா காது என்பது இவர்கள் எப்படி ஸாதிக்கக்கூடும். ஆத்ம தத்வ

ஞானிகளுக்கு கர்மாக்களில் அதிகாரமில்லை என்பது அனேக சுருதிஸ்மிருதி புராண ஸித்தமில்லையா?

தவிர கர்மாக்களை விடுவது ஸாத்விகராஜஸதாமஸமென்று மூன்றுவிதம். இவற்றில் ராஜஸதாமஸ பரித்தியாகந்தான் தவறேயன்றி ஸாத்விகமாக கர்மாக்களைவிடுவது சாஸ்திரீயமேயாகும். "கர்மாக்களை விடலாகாது" என்ற சாஸ்திரங்களுக்கும் ராஜஸமாகவும் தாமஸமாகவும் கர்மாக்களை விடலாகாதென்றுதான் அர்த்தம். ஸாத்விகமாகவும், கர்மாக்களை விடலாகாதென்று இவர்கள் சொல்லுவது பிசகு. அப்படியானால் அனேக சுருதிஸ்மிருதிகள் விரோதிக்கும். முடிவில் ஞானகாண்டமெல்லாம் அவலமாய் முடியும். ஸன்யாஸாச்ரமும் கிடையாது என்று சொல்லும்படி நேரிடும். ஸாத்விகமாக கர்மாக்களைவிடுவது—பயனை விரும்பாமல் கர்மாக்களை அனுஷ்டிப்பதுதான். ஆதலால் மீமாம்ஸக பக்ஷமும் ஸரியல்ல.

இங்கு ஒரு சங்கை:—

கர்மாக்களைவிடுவது மூன்று விதமென்று பிரித்துவிட்டு "பயனைவிரும்பாமல் கர்மாக்களை அநுஷ்டிப்பது" ஸாத்விக கர்ம பரித்தியாகமென்று எப்படி விருத்தமாக விபாகஞ்செய்வது ஸரியாகும். ராஜஸ தாமஸ பரித்யாகங்களில் சொன்னதுபோல் ஸாத்விகத்தியாகத்திலும் கர்மாக்களைப் பிரயோஜனத்துடன் விடுவது என்றுதானே சொல்லவேண்டும். ஆதலால் முடிவில் ஸாத்விகத்தியாகத்தை பயனைக்கோராமல் கர்மாக்களையனுஷ்டிப்பதுதான் என்று பகவான் சொல்லியிருப்பது விருத்தந்தான் என்று.

இதுவும் ஸரியல்ல:—

ஆரம்பத்தில் கர்மாக்களை அக்ஞர்களாகிய எவரும் விடமுடியாது. என்று नियतस्यतु सन्यासः என்ற சுலோகங்களால் ஸ்தாபித்துவிட்டு பிறகு கர்மபரித்தியாகத்தை மூன்று விதமாகப் பிரித்துப் பகவான் உபதேசிப்பதனால் ஸாத்விகமாகவும், கர்மஸ்வரூபத்தை விடுவது ஸாத்யமில்லை என்பது ஸித்தம். ஆனால் அதன் பலன்களைவிட்டுவிடவேண்டும். பிரயோஜனத்தை எதிர்பாராமல் கர்மாக்களைச் செய்துவருவதுதான் கௌண கர்மஸன்

யாஸமென்று சொல்வது. ஆகையால் கர்மத்தியாகம் தியாகமல்ல. கர்மபலத்தியாகந்தான் கர்மத்தியாகமாகும் என்று கர்மபலத்யாகத்தை ஸ்துதி செய்யும்பொருட்டுதான் பகவான் கர்மபலபரித்யாகத்தை மூன்றுவதாக விபாகஞ் செய்திருக்கிறார். கர்மாவை விடாமல் கர்மபலனைமட்டும் விடுவதிலும் "தியாக" பதார்த்தம் ஸம்பவிக்காமலில்லை. ஆதலாலிந்த பூர்வோத்தாவிரோதம் யாதொன்றும் சங்கிப்பதற்கிடமில்லை

இதனால் एतान्यपितुकर्माणि என்ற சுலோகத்திற்கு காம்ய கர்மாக்களில்தான் தாத்பர்யம் என்ற சங்கையும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. நிஷ்காம கர்மானுஷ்டானத்தை விரிவாயும் திடமாயும் ஸ்தாபிக்குமிடத்தில் காம்யகர்மாக்களுக்குச் சிறிதும் பிரஸக்தி எற்பட நியாயமில்லையல்லவா?

दूरेण ह्यवरं कर्म । यज्ञार्थात्कर्मणोऽन्यत्र ।
त्रैगुण्यविषया वेदाः त्रैविद्या मां सोमपाः ।
क्षीणे पुण्ये मर्त्यलोकं विशंति ।

என்பதாதி சுலோகங்களால் பகவானும் காம்யகர்மாக்களையெல்லாம் நிந்திக்கவில்லையா?

यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणां ।

என்றும் பகவான் நித்யகர்மாவை சிலாகிக்கவில்லையா? ஆதலால் இந்தப் பிரகாணத்தால் முதலாவது 6-அத்தியாயங்களின் அர்த்தமாகிய நிஷ்காம கர்மயோகம் உபஸம்ஹரிக்கப்பட்டது. இனி பாக்கி 12-அத்தியாயார்த்தத்தை ஸங்கிரஹமாய்உபதேசஞ்செய்து முடிக்கின்றார்.

இவ்விதம் நிஷ்காமமாய் கர்மாவைச்செய்துகொண்டுவரும் கௌண ஸன்னிபாஸிக்குத்தான் சித்தசுத்தி மூலமாகவும் ஆத்மஞான பூர்வகமாயுள்ள முக்ய ஸன்யாஸம் கிடைக்கும். ஸன்யாஸம், கௌணம், முக்யம் என்றிருவிதமென்ற விஷயத்தை பகவான் சொல்லுகிறார்.

अनिष्टमिष्टं मिश्रञ्च नतु सन्यासिनां क्वचित् । என்று

இந்த சுலோகத்தில் கௌண முக்யஸன்யாஸங்களுக்கு பாஸ்பர விசேஷமுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது

கௌண ஸன்யாஸிகளுக்கு கர்மபல ஸம்பந்தமுண்டு. முக்கிய ஸன்னியாஸிகளுக்கோவென்றால், கர்ம ஸம்பந்தமும் அதன் பல ஸம்பந்தமுமில்லை. என்பதுதான். "அத்யாகிநாம்" என்றதால் கௌணகர்மஸன்யாஸந்தான் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றிவேறல்ல!

இவ்விடத்தில் "அத்யாகிநாம்" என்ற பதத்திற்கு ஸகாம கர்மானுஷ்டானம் செய்பவர்களாகிய ஸகாமர்கள் என்றுதான் அர்த்தம் சொல்லவேண்டும். கௌணஸன்யாஸிகளென்று அர்த்தம் சொல்வது ஸரியல்ல "ஸந்யாஸிநாம்" என்ற பதத்திற்குத்தான் கௌண ஸன்யாஸிகளென்று அர்த்தம். ஆதலால் முக்கிய ஸன்யாஸிகளைப்பற்றி இந்த சுலோகத்தில் பிரஸக்தியே இல்லை. என்பதாக சிலர் சொல்லுகிறார்கள்.

இவ்வண்ணம் இவர்கள் சொல்வது ஸரியில்லை. இவர்களுடைய அர்த்தத்தை அங்கீகரித்தால் "பிரேத்ய" என்றபதம் முதலாவதாகப் பொருந்தாமல்போகும். ஸகாமமாக கர்மாவைச் செய்கின்றவர்களுக்குக் கர்மபல ஸம்பந்தம் மரணத்திற்குப்பிறகுதானென்ற நிர்ப்பந்தமில்லை. ஜீவிக்கும்போதும் கர்மபல ஸம்பந்தம் அவர்களுக்கு உண்டென்று நிரூபித்து விடலாம். திருஷ்டம், அதிருஷ்டம், என்ற இவ்விருவித பலன்களைக்குறித்துத் தானே கர்மகாண்ட விதிகளனைத்தும் கர்மாக்களை விதிக்கின்றன.

இதற்காக प्रेत्य என்றபதத்திற்கு कर्मानुष्ठानोत्तरकाल என்று அர்த்தம் சொல்வதும் அஸங்கதம். இதைத் தாத்பரியார்த்தமாக ஒருவாறு ஒப்புக்கொள்ளும்படியிருந்தாலும் சப்தார்த்தமாக ஒருபோதுமொப்பமுடியாது. தவிர இந்தப்படியே அர்த்தத்தை அங்கீகரிப்பதனால் நிஷ்காமர்களுக்கு "அதிருஷ்டமாயுள்ள ஸ்வர்கம் முதலிய கர்மபலஸம்பந்தமில்லையென்றும், ஸகாமர்களுக்குமப்படியே அதிருஷ்ட கர்மபலஸம்பந்தமட்டுமுண்டென்றும், சொல்லப்பட்டதாக ஏற்பட்டுவிடும். திருஷ்டமாகிய பசு புத்திராதி கர்மபல ஸம்பந்தமுண்டென்றோ இல்லையென்றோ? சொல்லப்பட்டதாக ஏற்படமாட்டாது.

நிற்க, ஸன்யாஸிநாம் என்றபதத்திற்கு கௌண ஸன்யாஸமென்ற அர்த்தம் முக்கியமாகாது. முக்கியார்த்தமிவ்விடத்தில் ஸம்பவிக்குங்காலத்தில் எதற்காக கௌணார்த்தங் கூறவேண்டும்.

गौणमुख्ययोर्मुख्ये कार्यसंप्रत्ययः ।

என்றல்லவா, வையாகாணமரியாதை. ஆகவே ஸந்நியாஸ பதத்திற்கு முக்கியஸன்யாஸி என்றுதான் அர்த்தஞ்சொல்லவேண்டும். தவிறபூர்வபக்ஷிகளின் அபிப்பிராயப்படி ஸன்யாஸிநாம் என்றபதத்திற்கு கௌணஸன்யாஸியென்று அர்த்தஞ்சொல்வது விருத்தமேயாகும். பிரயோஜனத்தை யபேக்ஷிக்காமல் சித்தசுத்தியின் பொருட்டு வைதிககர்மாக்களை அனுஷ்டிப்பவர்களாகிய நிஷ்காம கர்மயோகிகளுக்குங்கூட ஜன்மாந்தர கர்மபலஸம்பந்தம் அவசியம் ஸம்பவித்தே தீருமல்லவா? நிஷ்காம கர்மயோகிகளுக்கு ஜன்மாந்தரமில்லையென்றால், ஞானிகளைத்தவிற மற்றவர்களுக்கு சரீராந்தரமுண்டென்று அறிவிக்கும்சுருதி ஸ்மிருதி நியாயமெல்லாம் பாதிக்கப் பட்டுவிடும். ஞானிகளைத்தவிர மற்ற கர்மயோகிகள், உபாஸகர்கள் முதலியவர்களுக்கு ஞானத்தாலக்ஞானமழியாததால் சரீராந்தரம் முதலிய கர்மபல ஸம்பந்த முண்டென்பதை, பகவானும் கீதை 6-வது அத்தியாயத்தில் யோகப்ரஷ்டனிடம் காண்பித்திருக்கிறார். சுருதிஸ்மிருதிகளிலும், அவ்விதம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதமிருக்க பகவான் கௌண ஸன்யாஸிகளாகிய, நிஷ்காமகர்மிகளுககுக் கர்மபல ஸம்பந்தமில்லை என்று எப்படி உபதேசிப்பார்? நிஷ்காமகர்மிகளுக்கு ஜன்மாந்தர மவசியமுண்டென்பதைத்வைதிகளும்விசிஷ்டாத்வைதிகளும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நிஷ்காம கர்மயோகிகள் ஸன்யாஸாச்ரமத்திலேயே தான்வஸிக்கவேண்டுமென்றநிர்ப்பந்தமுமில்லை. ஆதலால்ஸன்யாஸிநாம்என்றபதம்நிஷ்காமகர்மயோகிகளைஎப்படிஉறைக்கும். ஆகவே ஸன்யாஸிநாம் என்றபதத்திற்கு ஸ்ரீ பகவத்பாதாளின் அர்த்தம் தான் மேலானதாகும்.

ஸ்ரீபகவத்பாதபாஷ்ய தாத்பரிய ஸாராம்சமாவது— நிஷ்காம கர்மயோகிகளுக்கே ஜன்மாந்தராதி கர்மபலஸம்பந்தம் உண்டென்றால் ஸகாமர்களுக்குக் கேட்கவும் வேண்டுமா? இவ்விருவர்களும் அக்ஞானிகளேயாதலால் அதன் காரிய ஸம்பந்தமுமகலுவது இல்லை. ஆத்மஞானிகளுக்குத்தான் அக்ஞானமற்றுப் போகுமென்பதும் அதன்காரியமுமகன்றுவிடுமென்பதும் சுருதி ஸ்மிருதி ஸித்தமில்லையா? ஞானந்தான் அக்ஞானம், அதன் காரியம் இவைகளுக்குச் சத்துருவேயொழிய கர்மாவும் உபாஸனமு

மல்ல. பிரகாச மந்தகாரத்தை விலக்குமேயன்றி அந்தகாரமே யல்ல. கர்மாவால் கர்மபல ஸம்பந்தமில்லாமல் செய்துகொள்ள ஒருக்காலும் முடியாது. கர்மாவையும், கர்மபல ஸம்பந்தத்தையும் விலக்கிக்கொள்ளவதற்காகத்தான் பயனை கருதாமல் கர்மாக்களை அனுஷ்டிக்கவேண்டுமென்பது कर्मणाकर्मनिर्हारः என்றல்லவா ஸித்தாந்தம். கர்மிகள் யாராயிருப்பினும் சரீராந்தரம் முதலிய கர்மபலம் ஸம்பந்திக்காமலிருக்க நியாயமில்லை. ஞானிகளுக்குத்தான் கர்மபல ஸம்பந்தமற்றுப்போகும் என்று ஆத்ம ஞானிகளுக்குஸ்வபாவமாய்ஏற்படும்கர்மஸன்யாஸமேமுக்ய ஸன்யாஸம். இவ்வித ஸன்யாஸிகளைத்தான் ஸன்யாஸிநாம் என்ற பதம் அறிவிக்கின்றது.

இத்தகைய ஆத்மஞானமும் அதன் பிறகு ஏற்படும் ஸன்யாஸமும் சுருதிஸ்மிருதி நியாயானுபவ ஸித்தமாதலால் த்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் இதை மறுக்கமுடியாது. ஆதலால் ஞானிகளுக்கு ஜன்மாந்தரம் முதலிய கர்மபல ஸம்பந்தம் ஏற்பட நியாயமில்லை. அக்ஞர்களோ மூன்று விதமாவர். காம்ய கர்மாக்களையும் நிஷித்த காரியங்களையும்அனுஷ்டிப்பவர் முதலாவதாவர். இரண்டாவதாவர் நிஷ்காம கர்மயோகிகளேதான். மூன்றுவதவர் ஆத்மவிசாரம் செய்வதற்காக விவிதிஷா ஸன்யாஸத்தை அடைந்தவர்கள். இவற்றுள் முதலாவது பேர்வழிகளுக்கு கர்மபல ஸம்பந்தமுண்டென்பதை பகவானேமுன் அனேக விடங்களில் சொல்லியிருக்கிறுர். அது யாவருக்கும் பிரஸித்தமே. நிஷ்காம கர்மிகளுக்கு ஜன்மாந்தர ஸம்பந்தம் உண்டா இல்லையா என்ற விஷயத்தை முன்பு நிர்ணயிக்காதபடியால் अनिष्टमिष्टं मिश्रञ्च என்ற இந்த சுலோகத்தால் அதை நிர்ணயித்து முடிப்பதாகத்தான் அர்த்தம் அவசியம் சொல்லவேண்டும். இதுதான் பொருத்தமாகும். விவிதிஷா ஸன்யாஸிகளாகிய மூன்றுவது அக்ஞர்களுக்கு ஞானுதிகாரம்பெற்று சரீராந்தரத்துடன் ஸம்பந்தமுண்டென்பதை பகவான் 6-வது அத்தியாயத்தில் अयतिश्श्रद्धयोपेतः என்பதாதி சுலோகங்களால் அங்கீகரித்திருக்கிறுர். ஆதலால் அக்ஞர்களாகிய நிஷ்காமகர்ம யோகிகளுக்கு ஜன்மாந்தரம்முதலிய கர்மபல ஸம்பந்தம் அவசியமுண்டென்று ஸித்தம்.

தவிர முக்கிய ஸன்யாஸிகளுக்கு சரீரேந்திரியாதிகளி லபிமானமில்லை. கர்மாக்களை ஒருவன்செய்யவேண்டுமானால் சரீராதிகளில் அபிமானம்வேண்டும். இவர்களுக்குச் சரீராபிமானம் அகன்றுவிட்டது. கௌண ஸன்யாஸிகளுக்கு சரீராதிகளில் அபிமானம் அகலவில்லை. ஆகையால் அவர்களுக்கு கர்மாதிகாரமும், கர்மபல ஸம்பந்தமும் விலகுவதில்லை. முக்யஸன்யாஸிகளுக்குக் கர்மாதிகாரங்கிடையாது. கர்மபலஸம்பந்தமுமில்லை. அவர்கள் சரீராபிமான மில்லாமலே சரீரத்திலிருப்பவர்கள். சரீராபிமானிகளுக்குத்தான் கர்மாவும், கர்மபலனும் ஸம்பவிக்கும். சரீரமில்லாமல்போனால் கர்மபலானுபவம் எப்படி ஏற்படும். ஆத்மாவானது உண்மையில் அகர்த்தாவாகவும், அபோக்தாவாயுமுள்ளது. அகர்த்தாவாயும், அபோக்தாவாயுமுள்ள ஆத்மாவிற்குகர்த்ருத்வம், போக்த்ருத்வம், முதலியவை சரீராபிமானத்தால்தானேற்பட்டது. ஆத்மாவிற்கு கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பாரமார்த்திகமாக ஒருபோதும் ஸம்பவிக்கமாட்டாது. இத்தகைய ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்தவர்கள்தான்முக்யஸன்யஸிகளாவார்கள். இவ்விஷயத்தைத்தான் तत्रैवंसतिकर्तारं என்றசுலோகத்தால் கீதாசாரியாள் நன்குநிருபித்துள்ளார்கள்.

" साक्षी चेता केवलो निर्गुणश्च "

असङ्गोह्ययं पुरुषः । असङ्गो न हि सज्जते ।

என்றசுருதிகளும், ஆத்மாவிற்குப் பாரமார்த்திகமாகக் கர்த்ருத்வாதிகளில்லை என்றுநிரூபிக்கின்றன ध्यायतीवलेलायतीव என்பதாதி சுருதிவசனங்கள். சரீரேந்திரியாதிகளால்தான் ஆத்மாவிற்கு கர்த்ருத்வ போக்த்ருத்வமென்றும் சொல்லுகின்றன.

பகவத்கீதையிலும் முன்னத்தியாயங்களில் இவ்விஷயம் நிருபிக்கப் பட்டிருக்கின்றது.

अहङ्कारविमूढात्मा कर्ताहमिति मन्यते ।
शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ॥ என்றும்

अनादित्वान्निर्गुणत्वात्परमात्मायमव्ययः ।
न करोति लिप्यते । என்றும்,

தவிர 13வது அத்தியாயத்தில் ஞானம் இச்சைகிருதிமுதலியவைகளைசரீரதர்மமாக பகவான் நிருபணம் பண்ணியிருப்பதை பராமர்சித்தாலும் ஆத்மாவிற்கு உண்மையில் கர்த்ருத்வாதிகளில்லை என்னும் ஸ்பஷ்டமாய்த்தெரிகிறது. ஆத்மா விகாரமற்றதென்பதுசுருதிஸ்மிருதி நியாய ஸித்தமானதால் சரீராதிகளில் ஸம்பந்தமில்லாதவரையில் ஆத்மா கர்த்தாவாகவும் போக்தாவாகவும் இருப்பதற்கு ஒருக்காலும் ஸரிப்படாது. ஆத்மாவிற்குக் கர்த்ருத்வாதிகளிருப்பதாக நினைப்பது பிராந்தியேயாகும். இவ்விஷயங்களையெல்லாம் ஸ்ரீபகவான்

तत्रैवं सति कर्तारमात्मानं केवलं तु यः ।
पश्यत्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ॥
यस्य नाहंकृतो भावः बुद्धिर्यस्य न लिप्यते ।
हत्वापि सइमान्लोकान्न हन्ति न निबध्यते ॥

“இவ்விரண்டு சுலோகங்களால் முக்ய ஸன்யாஸிகளின் ஸ்வரூபத்தை நிரூபிப்பது மூலமாக ஆத்மஸ்வரூபத்தை அறிவித்திருக்கிறார்”

“இந்த சுலோகங்களால் கர்த்ருத்வாதிதர்மஹீனமாகிய, ஆத்மாவை, கர்த்தாவாகவும் போக்தாவாகவும் எவனொருவன் நினைக்கின்றானோ? அவன் அக்ஞானியேயாவான், அவனுடைய அத்தகையஞானம் பிரமவடிவமேயாகும். எவனுக்கு அஹங்காரமில்லையோ? எவனுக்கு கர்மபலத்தை யனுபவிப்பதில் ஆசையில்லையோ, அவன் இவ்வுலகத்தையே கொன்றுவிட்டாலும் (கொல்வதாகப் பிறருக்குத் தோன்றினாலும்) உண்மையில் அவன் கொன்றவனாக ஆவதுமில்லை. அதன்பலத்தை யனுபவிப்பதுமில்லை” என்று உபதேசிக்கப்படுகின்றது.

(தொடரும்)

வீ. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

# யாஜுஷோபாகர்ம நிர்ணயம்.

இவ்வருஷம் யாஜுஷோபாகர்மம் பஞ்சாங்கங்களில் பல விதமாகப் போடப்பட்டதுபற்றி சம்சயப்படக்கூடியதாயிருந்த படியால் முடிகொண்டான் கிராமத்தில் நடந்த அத்வைத ஸபையில் இதை நிச்சயப்படுத்தவேணுமென்று அந்தக் கிராமவாஸிகளும், கிராமாந்தரவாஸிகளும் பிர்ச்னம் செய்தார்கள். பரீக்ஷாதிகாரிகளும் மற்ற பண்டிதர்களும் விசாரித்து—"முன்பல வருஷங்களில் இதேவிதமான ஸம்சயம் நேர்ந்தபோது பெரிய விசாரம்செய்து, உபாகர்மத்திற்கு முக்கியகாலமாகிய சிராவணீ பௌர்ணமிக்கு தோஷமிருந்தால் தோஷமற்ற பிரௌஷ்டபதீ அடுத்த கௌணகாலமென்றும், அதிலும் தோஷமிருந்தால் ஆஷாடீ பௌர்ணிமை காலமென்றும், ஆபஸ்தம்பிகள் கொள்ளவேண்டும். போதாயனிகளோ சிராவணிக்கு தோஷமிருந்தால் அடுத்த கௌணகாலமாக ஆஷாடியையும், அதற்குதோஷமிருந்தால்ப்ரௌஷ்டபதீயைக் கௌணகாலமாகக் கொள்ளவேண்டும். இதில் பிரதமோபாகர்மம், மற்ற துவிதீயாதி உகாகர்மம் என்ற பேதமில்லை. எந்த உபாகர்மமானாலும் தோஷமற்ற காலத்திற்றான்செய்ய வேண்டும். மூன்று காலமும் தோஷமுள்ளதாயிருந்தால் சிராவணீயிலேயே செய்யவேண்டும். அப்பொழுது பிரதமோபாகர்மத்தை சாந்திபூர்வமாகச் செய்யவேண்டுமென்பதுதான் விசேஷம்" என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதையே இவ்வருஷத்திலும் தீர்மானப்படுத்தினார்கள். அதாவது-இவ்வருஷத்தில் சிராவணிக்கு சுக்கிரமௌட்டிய தோஷமும், பிரௌஷ்டபதிக்கு சுக்கிரமௌட்டியத்தோடு கிரஹணமுமிருப்பதால் ஆஷாடீதோஷமற்றதாயிருப்பதால் அதிலேயே அதாவது—ஆடி 14உ உள்ள பௌர்ணமியிலேயே எல்லா உபாகர்மங்களையும் செய்யவேண்டுமென்று ஏகரூபமாகவே தீர்மானப்படுத்தினார்கள். ஆகையால் அதன்படியே இவ்வருஷத்தில் யாஜுஷர்களெல்லோரும் உபாகர்மத்தை ஆடிமீ 14உயுள்ள ஆஷாடீ பௌர்ணமியிலேயே பிரதமோபாகர்மம் துவிதீயாதி உபாகர்மம் எல்லாவற்றையும் செய்யவேண்டும்.

---

பத்திராதிபர்.

# யாஜுஷோபாகர்மத்தில் ஓர் சங்கை.

புதுக்கோடு அநந்தநாராயண வாத்தியார் எழுதுகிறுர்— இவ்வருஷம் யாஜுஷோபாகர்மத்திற்கு முக்கியகாலமாகிய சிரா வணீக்கு சுக்கிரமௌட்டியதோஷமும். பிரௌஷ்டபதீக்கு அர்த்த ராத்திரிக்குமுன் கிரஹணமும் ஆஷாடீக்கும் குரு மௌட்டிய தோஷமுமிருப்பதால் மூன்று மாதங்களிலும் தோஷமிருக்கிறது. மூன்றுமாதங்களிலும் தோஷமிருந்தால் முக்கியகாலமாகிய சிரா வணீயிலே சாந்திபூர்வமாகச் செய்யவேண்டுமென்று தோன்று கிறது. இங்கு சிலர்—"ஸ்வசாகாதிபதிக்கு சக்தியிருந்தால் செய்யலாம்" "குரு, சுக்கிரன் இவர்களுள் ஒருவன் மௌட்டி யத்தையடைந்தாலும் மற்றொருவன் வலுத்திருந்தால் மௌட்டிய தோஷமில்லை" என்ற வசனங்களால் குரு மௌட்டியமிருந்தா லும் சுக்கிரன் வலுத்திருப்பதால் தோஷமற்ற கௌணகாலமா கிய ஆஷாடீயில் உபாகர்மத்தைச் செய்யவேண்டும்" என்கிறுர் கள். சிலர் ஆஷாடீக்கு குரு மௌட்டிய தோஷமே கிடை யாது என்கிறுர்கள். ஆகையால் இவ்வருஷத்தில் ஆஷாடீக்கு குரு மௌட்டிய தோஷமுண்டா? இல்லையா? இருந்தால் உபாகர் மத்தை எப்பொழுது செய்யவேண்டும் என்பதை நன்ருக விசாரித்து நிச்சயித்து எழுதவேண்டும்.

பு. ரா- அநந்தநாராயண வாத்தியார்.
புதுக்கோடு.

---

கல்லிடைக்குறிச்சி L. வெங்கடசுப்பரமணியன் எழுது கிறுர். இவ்வருஷம் உபகர்மாவை ஆபஸ்தம்பிகள் எப்பொழுது செய்யவேண்டும். சிராவண மாஸத்தில் சுக்கிர மௌட்டியமும் பிரௌஷ்டபதியில் சுக்கிரமௌட்டியமும், கிரஹணமும், ஆஷாடீ யில் குரு மௌட்டியமும், சுக்கிரனுக்கு வார்த்தக்கியமும் இருப் பதால் குரு சுக்கிரர்களின் பால்யவார்த்தக்கியங்களும் தோஷங்க ளாகச்சேர்ந்திருப்பதால்—

मासत्रयेऽपि दोषश्चेच्छ्रावण्यामेव कारयेत् ।

மூன்று மாஸத்திலும் தோஷமிருந்தால் சிராவணீயிலேயே செய்யவேண்டும்'' என்ற நியாயப்படி சிராவணீ பௌர்ணமையில்தான் உபாகர்மாவைச் செய்யவேணுமென்றுசிலபெரியோர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். குரு சுக்கிரர்களுக்கு வார்த்தக்கியம் ஒரு பக்ஷம் (15-நாள்) என்றும் சொல்லுகிறார்கள். பக்ஷாந்தரத்தில் மூன்றுநாள்வரை சொல்லியிருக்கிறது. ஆனதால் தாங்கள் பார்த்து நாங்கள் எப்பொழுது செய்யவேண்டுமென்பதைத் தீர்மானித்து எழுதவேணுமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

L. வேங்கடசுப்பரமணியன்,
கல்லிடைக்குறிச்சி.

---

# இந்த சங்கைகளுக்கு ஸமாதானம்.

அத்வைதஸபா பண்டிதர்கள் தீர்மானித்தபடி யாஜுஷர்கள் எல்லா உபாகர்மத்தையும் இவ்வருஷத்தில் ஆடிமீ 14வ உள்ள ஆஷாடீயிலேயே செய்யவேண்டும். அதற்கு குருமௌட்டியதோஷமிருக்கிறதே என்று நினைக்க இடமில்லை. குரு மௌட்டியமிருப்பதாக ஒப்புக்கொண்டாலும் யஜுஸ் சாகாதிபதியான சுக்கிரன் தினபலத்தை அடைந்திருப்பதால் "சாகாதீசன் சக்தியோடு இருக்கும்பொழுது அந்த சாகையை அத்தியயனம் செய்வது நல்லது'' என்ற வசனப்படி ஆஷாடியில் தோஷமில்லாமலிருப்பதால் அதில் உபாகர்மத்தைச் செய்யவேண்டுமென்ற ஸித்தாந்தம் ஸரியானதே. அன்றியும் குருமௌட்டிய தோஷமும் கிடையாது, குரு உச்சத்திலிருப்பதாலும் மௌட்டிய தோஷநிஷேதம் கிடையாது. அங்ஙனமே ஜ்யோதிர் நிபந்தத்தில்-

हरिनीचारिभागेपि व्रतोद्वाहादिमङ्गलम् ।
न निषिद्धं यदिस्वोच्च स्वभेवा संस्थितो गुरुः ॥

"குரு தன் உச்சத்திலாவது தன் ராசியிலாவது இருந்தால் மௌட்டியதோஷ நிஷேதமில்லை'' என்றதால் குரு இப்பொழுது உச்சத்திலிருப்பதால் மௌட்டிய தோஷமேகிடையாது. பக்ஷாந்தரபடி சுக்கிரனுக்கு வார்த்தக்கியமுமில்லை. ஆகையால் தோஷமற்ற ஆஷாடீயிலேயே உபாகர்மத்தைச் செய்யவேண்டும்.

பத்திராதிபர்.

# புத்தகவரவு—மதிப்புரை

## வ்ருத்தாலங்காரரத்னாவளீஎன்னும் ராமஸ்துதி,

இஃது கௌசிக குலக்கடலின் கௌஸ்துபமணியாய் விளங்குபரும், சென்னை பச்சையப்பன்காலேஜில் ஸம்ஸ்கிருதப் பிரதமபண்டிதருமான சுவேதாரண்ணியம் நாராயணதீக்ஷிதவர்களாலியற்றப்பட்டது. வ்ருத்தவிசேஷங்களில்உவமை முதலிய அலங்காரங்களமையப்பெற்றது. கவிதைஎன்னும் விருக்ஷத்திற்குப் பரமபலமாக ஸ்ரீ ஜயதேவ கவிமுதலிய கவிரத்னங்களால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ ராமஸ்துதியென்னு மிரத்தினங்களிழைத்தது ஸாஹித்திய ஸாகரத்தில் நீந்திவிளையாடும் ஸஹிருதய சிகாமணிகளுக்கும் ஸ்ரீ ராமபக்தியென்னும் ரம்மியமான உத்யானத்தில் உல்லாஸமாய் உலாவிவரும் உத்தமர்களுக்கும் உற்சாஹத்தை வளர்ப்பது. யாவருமெளிதில் அறிந்துகொள்ளுவதற்காக ஆக்கியோனாலேயே இயற்றப்பட்ட வியாக்கியானத்தோடு கூடியது. விலை ஸரஸமாயுள்ளது. விலை அணா எட்டே. வேண்டியவர்கள், சென்னை தம்புசெட்டிவீதி 154–நி. வீட்டு விலாஸத்திற்கெழுதிப் பெறலாம்.

## ஸ்தோத்திரங்கள்.

ஷை தீக்ஷிதர்களாலேயே பக்திமான்களுக்கு உபகாரமாகஎளிய வடமொழியில் ஸ்ரீசந்திரசேகரேந்திரஸரஸ்வதீஜகத்குருஸ்தோத்திம்முதல் லக்ஷ்மீநக்ஷத்திரமாலை வரையுள்ள 30—ஸ்தோத்திரங்களியற்றப்பட்டன. அவைபடிக்கும் பொழுதே பக்திமான்களின் மனதைப்பரவசமாக்கி ஸ்ரீ ராமபிரானது பாதகமலங்களிலீடுபடச் செய்கின்றனவென்பது அனுபவ ஸாக்ஷிகமானது. இதன்விலையும் அணா எட்டே. கீழ்கண்ட விலாஸத்தில் கிடைக்கும்.

## ஸந்தியாமந்திரங்களின் அர்த்தம்.

ச்ரௌதஸ்மார்த்தங்களாகிய ஸகலகர்மங்களும் பெயர் மாத்திரமாய் மிஞ்சிய இக்கலியில் ஸந்தியா கர்மாவொன்றுதான் ஸநாத்னிகள் யாவராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதில் விநியோகிக்கப்படும் மந்திரங்கள் அர்த்த ஞானத்தோடு உச்சரிக்கப்

பட்டால் அளவற்ற பயனையளிக்கும். அதற்காகவே ஷெ தீக்ஷித ரவர்கள் வைத்தியநாததீக்ஷிதீயம், வித்தியாரண்ணிய வேதபாஷ்யம் முதலிய விடங்களிலிருந்து சேகரித்து ஸந்தியா மந்திரார்த்தங்களை தேவநாகாலியில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அதோடு ஸூர்ய நமஸ்கார மந்திரார்த்தம், ஔபாஸனமந்திரார்த்தம், தர்சதர்ப்பண மந்திரார்த்தம் பிரும்மயக்ஞமந்திரார்த்தம் இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது நித்தியகர்மங்களில் சிரத்தையுள்ளவர்களுக்கு அத்யாவச்யகமாயுள்ளது. விலை. நான்கு அணு. கீழ்காட்டியவிடத்தில் கிடைக்கும் இவைகளெல்லாம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவாள் செய்த ஆக்ஞானுஸாரமாக அச்சிலியற்றி பிரசுரிக்கப்பட்டன. ஆஸ்திகர்களுக்கு இன்றியமையாதவை.

---

# வாரவிருத்தாந்தம்

கோண்டாட்டமா? ஹைதராபாத்தில் (ச்ராத்ததினம்போல்) சாரதாசட்டம் உண்டான தினத்தை ச்ரத்தையுடன் கொண்டாடினர்களாம் அதன் அபிமானிகள். எல்லா ஜாதிகளும் ஒன்று சேர்ந்து ஸமபந்திபோஜனம் செய்தார்களாம். சாரதாவுக்கு ஓர் ஸந்தோஷத்தந்தி அனுப்பினர்களாம். ஆசாரசீர்திருத்தக்காரர் இயற்கையாக செய்யக்கூடியதுதான் இது. ஆனால் ஈசன் மதாபிமானிகள் பக்கமிருந்து அவ்வபூர்த்திக்கொண்டாட்டத்தை ஆப்திகமாகும்படி செய்திருக்கின்றார். ஆயினும் அது அடியோடு அழியும்வரை ரணாரணகமே.

ஜயவிஜயீபவ:— பாம்பேயில் ஸமீபத்தில் கூடப்போகும் சட்டஸபையில் சாரதாசட்டம் அமுலுக்கு வாாதிருக்கும்படி ஓர் சட்டத்தை ஒரு அங்கத்தினர் கொண்டுவந்திருக்கிறார். அவர் கோரிக்கை நிறைவேற ஸர்வேசன் அருள்புரிவாராக. இங்ஙனம் இதைப் பின்பற்றி மற்ற சட்டஸபைகளும் தீர்மானம் செய்தால் இந்திய சட்டஸபையில் ஸமீபத்தில் வரும் ஷெ சட்டத்தையகற்றும் தீர்மானம் நிறைவேறும்.

பௌருஷேயப் பிராம்மணர்:—பிராமணர் தங்களைப் பிராமணர் என சொல்லிக்கொள்வதை அவமானமென சிலர் கருத சிலர் விப்ரக்ஷயம் என இவர்களை வேரோடு அகற்ற முயற்சிக்க புதிது புதிதாக பற்பல பிராமணர் தோன்றிவருகின்றனர். ஸௌராஷ்டிர ப்ராமணர் விச்வகர்மபிராமணர் நியாயிபிராமணர் என்பவர்களது பழய பெயர் முறையே பட்டநூல்காரர் கம்மாளர் அம்பட்டர் என்பதாம். கொச்சியில் விச்வகர்ம அவாந்தர வகுப்பைச் சார்ந்த சிலர் தங்களை கவர்ன்மெண்ட் ரிகார்டுகளில் பௌருஷேய பிராமணர் என பெயரை மாற்றி பௌருஷேயபிராமணர் என அழைத்து சில ஸௌகர்யங்களைச் செய்யவேண்டுமென மகஜர் அநுப்பினர். பெயரை மாற்ற மறுத்து ஆசாங்கம் தாழ்ந்த வகுப்பாருக்குச் செய்வதைவிட அதிகம் செய்யமுடியாதென்றது. அரசாங்கம் ஸம்ஸ்கிருதபாடசாலையில் சேர்த்துக்கொண்டு உதவிச்சம்பளம் உணவுக்காக அளிக்கவேண்டுமென மற்ரோர் மகஜாநுப்பினர். முடிவை ஆவலுடன் எதிர்பார்ப்போம்.

வஸிஷ்டர் வாயால் அர்த்தம் தெரியாமல் ஸம்ஸ்கிருதத்தில் ஏதேதோ மந்த்ரத்தைச் சொல்லி ஸந்தியாவந்தனம் முதலியவைகளைச் செய்வதைவிட தானறிந்த பாஷையில் பகவானைப் பிரார்த்தித்தால் போதாதோ என பல தற்காலத்தவரது உள்ளத்தே தோன்றும் சங்கை. இதை ஓர் அன்பர் ஸ்ரீமான் காந்தியைக் கேட்டார். அவரல்லவோ தற்கால வஸிஷ்டர். அவர் வாயால் பழைய ஸம்ஸ்கிருத சொல்லுக்கோர் தனி மஹிமையுண்டு. அதை மாற்றாமல் அப்படியே உச்சரிக்கவேண்டும், அர்த்தமும் கற்கவேண்டும் என உத்திரவு கொடுத்துவிட்டார். வேண்டாவற்றிற்கு அவரை ப்ரமாணமெனக்கொள்ளும் பிராமணர் இனி ஸந்தியாவந்தனத்தையாவது ஸ்வரமாக பெரியோரிடம் அர்த்தமுணர்ந்து அநுஷ்டிப்பாரா? விடுவாரா? பார்ப்போம்.

வே. ஸோமதேவ சர்மா.

---